# மெட்ரோ ரயிலில் 3 நாள் பொங்கல் விழா



சென்னை, ஜன. 9–

மெட்ரோவில், மூன்று நாட்கள் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. கர்நாடகா குழுவினரின் டோலுகுனிதா துள்ளிசை நடனமும் இடம் பெறுகிறது.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப் பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப் படுகிறது. மெட்ரோ நிறுவனத்தின் சார்பில், ஒவ்வொரு ஆண்டும், பொங்கல் விழா கொண்டாடப் படுகிறது.

இதையொட்டி, நாளை, சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையத்தில், மாலை, 5:45 மணியில் இருந்து, கலை நிகழச்சி துவங்குகிறது.

கேரளா, பையனூரைச் சேர்ந்த, சிகாபுதீன் குழுவினரின் திருவாதிரைக் களி மற்றும் ஒப்பனா நடனத்துடன், கர்நாடகா மாநிலம், சிமோகாவைச் சேர்ந்த பூதியப்பா குழுவினரின், டோலுகுனிதா துள்ளிசை நடனமும், கிருஷ்ணகிரியைச் சேர்ந்த செல்வம் குழுவினரின், தப்பாட்டம் கலை நிகழ்ச்சியும் நடக்கிறது.

இக்குழுவினர்களின் கலை நிகழ்ச்சிகள், 10ம் தேதி, சென்ட்ரல் மெட்ரோவிலும், 11ம் தேதி, திருமங்கலம் மெட்ரோவிலும், மாலை, 5:45 மணியில் இருந்து நடக்கிறது.

ரயில் பயணியர், பொதுமக்கள், பள்ளி, கல்லூரி மாணவ – மாணவியர், மெட்ரோ பொங்கல் விழாவில் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.